22 MAR 1972
UNDERGRADUATE LIBRARY

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 41

யாழ்ப்பாணம் பங்குனி 9 ஸபர் 6 புதன்கிழமை (22-3-72)

தெய்வீக
நறுமணம் கமழும்
சண்முகா ஐவ்வாது
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்களும் :-: ஏகவிநியோகஸ்தர்களும்
ஆ. இராசையா அன் சன்ஸ்
(மருந்துக் கடை)
69, கே.கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்

# பலாலி விமானநிலையத்தினுல் சர்வதேச போக்கு வரத்து

## பெரியவிமானங்கள் இறங்க நிலையம் விஸ்தரிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய் சர்வதேச போக்குவரத்திற்கு ஏற்றவிதத்தில் பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்பட விருக்கிறது. இந்நிலையம் விஸ்தரிக்கப்பட்ட பின்னர் பெரிய ஜெட் விமானங்கள் இறங்கிச் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் தற்பொழுது பெரிய ஜெட் விமானங்கள் இறங்கிச் செல்கின்றன. காலநிலை சரியில்லாத போது பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலயத்தில் இறங்கமுடியாத பெரிய ஜெட் விமானங்கள் இறங்கிச்செல்ல மற்றொரு விமான நிலையம் தேவையாக இருந்தது.

இக்குறையைத் தீர்ப்பதற்காகவே பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்பட விருக்கிறது.

தற்பொழுது காலநிலை சீர்கேடு காரணமாக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலயத்தில் இறங்க முடியாத பெரிய விமானங்கள் சென்னை விமான நிலையத்திற்கே செல்கின்றன. பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்பட்டபின் இப்பெரிய விமானங்கள் சென்னைக்கு செல்லாது பலாலியிலேயே இறங்கிச் செல்லும்.

இந்த விஸ்தரிப்புக்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சிடம் அரசு கோரியுள்ளது.

## தி. மு. க. - பாரத கம்யூ. உறவு முறிந்தது

சென்னை, மார்ச் 21 திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியுடனான உறவை முறித்துக் கொள்வதென பாரத கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது.

சென்னையில் நடந்துமுன்று நாட்களாக பாரத கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஆட்சியில் ஊழலும் தொழிலாளர்களின் பிரச்னைகள் தீர்க்கப்படாமைக்கும் லஞ்சம் இடம்பெற்றிருப்பதாகவும் பலர் குற்றஞ்சாட்டியதாகத் தெரிகிறது.

இவ் விஷயங்கள் ஆராயப்பட்டபின் திராவிட முன்னேற்றக்கழக கூட்டணியிலிருந்து விலகுவதெனமுடிவு செய்யப்பட்டதாக பாரத கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. கல்யாணசுந்தரம் சென்னையில் தெரிவித்தார்.

## அக்கராயன் சிரமதான வேலைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ் அக்கராயன் குளக் கரைக் கிராமத்தில் நீர்ப்பாசன வாய்க்கால் ஒன்றை இம்மாதம் 25-ம் திகதி முதல் 4 தினங்கள் சிரமதானமூலம் அமைக்க போடப்பட்டிருந்த திட்டம் பின்போடப்பட்டுள்ளது.

இச் சிரமதான திட்டத்தில் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்லூரியின் தவணைப் பரீட்சை நடைபெறவிருப்பதால் சிரமதானத் திகதிகள் தங்களுக்கு வசதியாக இல்லையென கல்லூரி அதிபர்கள் தெரிவித்திருந்தனர். இதனால் இத்திட்டம் பின்போடப்பட்டுள்ளது.

அத்துடன் கிளிநொச்சி பகுதியில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளதாகவும், குளங்களின் நீர்பாய்ச்சுவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இப்படியான பல வசதியீனங்களால் சிரமதான திட்டத்தை பின்போட நேர்ந்ததாக சாந்திசேனா சங்க பொதுச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

## 30 அடி உயரத்திலிருந்து கீழே தவறி விழுந்தார்

எழுதுமட்டுவாள், செவ்வாய் பள்ளிக்கூடக் கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்த மேசன் தொழிலாளி ஒருவர் 30 அடி உயரத்திலிருந்து தவறிக்கீழே விழுந்தார். இவரது நிலை கவலைக்கிடமாயிருப்பதாக டாக்டர், அரசினர் கட்டிடத் திணைக்களத்திற்குத் தெரிவித்துள்ளார். அரசினர் கட்டிடத் திணைக்களம் பிரஸ்தாப கட்டிட வேலைகளை பொறுப்பேற்று நடத்திவருகிறது.

யாழ். நகரிலுள்ள கல்லூரியொன்றின் கட்டிடவேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை இத் தொழிலாளி கடந்த 18-ம் திகதி கட்டிடத்தின் மேலிருந்து தவறிக்கீழே விழுந்தார். புங்குடுதீவைச் சேர்ந்த எஸ். அந்தோனிப்பிள்ளை [வயது 30] என்ற பிரஸ்தாப தொழிலாளி யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இவரது கால் முறிந்ததுடன் [illegible] நெஞ்சும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. 3 பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளைக்கு விபத்துச் சம்பளம் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்க பொதுத் தொழிலாளர்சங்கம் ஈடுபட்டுள்ளது.

## மணலில் புதைக்கப்பட்டிருந்த 'மணிப்புரி' சேலைகள் சிக்கின!

யாழ்ப்பாணம், புதன் - மணலில் புதைக்கப்பட்டிருந்த வல்வெட்டித்துறையில் 30 மணிப்புரி சேலைகளை [illegible] சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்தனர்.

சுமார் 5000 ரூபா பெறுமதியான இச்சேலைகள் சுங்கப்பகுதியினரின் சோதனையின்போது நிலத்தில் புதைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை சுங்கப் பகுதி சப்-இன்ஸ்பெக்டர் திரு. வீரசுந்தரம் தலைமையில் சென்ற கோஷ்டியினர் இச் சேலைகளை கண்டுபிடித்தனர்.

சேலைகளின் உரிமையாளருக்கு, விசாரணையின்பின் 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது.

### நன்றி நவிலல்

எமது மகள் திருநிறை செல்வி லீலாவுக்கும் திரு. கை. சிவபாதம் தம்பதிகளின் மகனும் இலங்கை மின்சாரசபைப் பொறியியல் வல்லுனர் திருநிறை செல்வன் லோகேஸ்வரனுக்கும் 17-3-72 வெள்ளிக்கிழமை மாலை நல்லூர் சிவன் கோவிலில் நடைபெற்ற திருமணவிழாவுக்கும் அடுத்தநாள் சனிக்கிழமை மாலை மணமகன் இல்லத்தில் நடைபெற்ற வரவேற்பு உபசார விழாவுக்கும் நேரில்வந்து மணமக்களை ஆசீர்வதித்தும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் பரிசுகள் வழங்கியும் கௌரவித்த அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

45, கல்லூரிவீதி, யாழ்ப்பாணம்.

அ. சரவணமுத்துவும் பாரியாரும்.

4054

### மரண அறிவித்தல்

வி. தம்பி

யாழ்ப்பாணத்தை சேர்ந்த வி. தம்பி (கிளார்க் பொன்னுத்துரை) காலமாகிவிட்டார். இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், வைத்திலிங்கம் (முன்னைய காணி அபிவிருத்தி இலாகா), இரத்தினலிங்கம் (தொழில் அதிகாரி கொழும்பு), கணேசலிங்கம் (ஆசிரியர் யாழ், ஸ்ரான்லி மகாவித்தியாலயம்), சிவலிங்கம் (தொழில் அதிகாரி யாழ்ப்பாணம்), பஞ்சலிங்கம் (துறைமுகக் கூட்டுஸ்தாபனம் திருகோணமலை), காலஞ்சென்ற மகாலிங்கம் (பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்), சுந்தரலிங்கம், திலகா இராஜேஸ்வரி, ஆகியோரின் அருமைத் தந்தையும், இலாக்கியம், ஹார்டி, சற்குணராணி ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 158/3 இலக்க இல்லத்திலிருந்து இன்று (22-3-72) பிற்பகல் 4-30 மணிக்கு தகனக்கிரிகைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 4055

உதைபந்தாட்டப் போட்டி

# ஜெர்மன் கோஷ்டி யாழ். நகர் வருகிறது

யாழ்ப்பாணம், புதன்

கிழக்கு ஜெர்மன் உதை பந்தாட்டக் கோஷ்டி இம் மாதம் 27-ம் திகதி யாழ். நகர் வருகின்றது. இக் கோஷ்டி யாழ். தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் 28-ம் திகதி யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் ஒரு சிநேகபூர்வமான போட்டியில் மோதும்.

இந்தப் போட்டிக்கு வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

கிழக்கு ஜெர்மனின் தலைப்பட்டினமான பேர்லினிலுள்ள பல்கலைக் கழகங்களின் தெரிவு உதைபந்தாட்ட வீரர்களே இந்த ஜெர்மன் கோஷ்டியில் அங்கம் வகிக்கின்றனர். இம்மாத பிற்பகுதியில் இலங்கைக்கு வரும் இந்தக் கோஷ்டி இலங்கையின் பல பகுதிகளிலும் சென்று போட்டியிடும்.

இம்மாதம் 27-ம் திகதி யாழ். நகர் வரும் ஜெர்மன் கோஷ்டி, 28-ம் திகதி யாழ் கோஷ்டியுடன் போட்டியிட்டு, 29-ம் திகதி யாழ். நகரை விட்டு கொழும்பு புறப்படும்.

28-ம் திகதி யாழ். நகரில் நடைபெறும் இந்தப் போட்டி, யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மாலை 4-30-க்கு ஆரம்பமாகும். ஜெர்மன் கோஷ்டியில் 20 வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

1962-ம் ஆண்டு யாழ். துரையப்பா விளையாட்டரங்கு திறக்கப்பட்ட போது அப்போது இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த ஜெர்மன் கோஷ்டி ஒன்று முதன்முறையாக யாழ். நகர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜெர்மன் கோஷ்டியுடன் போட்டியிடுவதற்காக தற்போது யாழ். உதைபந்தாட்டக் கோஷ்டிக்கு கடும் பயிற்சி, யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இம் மாதம் 26-ம் திகதிவரை தினமும் நடைபெறுகின்றது.

இந்தப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. ஈ. கே. குமாரசாமி மேற்கொண்டுள்ளார். (தே நி.)

## வழிகாட்டியின்றி ஆசிரியர் கஷ்டம்

பருத்தித்துறை, செவ்

புதிய கல்வித் திட்டத்தின் படி முன்னோடித் தொழில்கள் 6ம் வகுப்பிலிருந்து போதிக்கப்படவேண்டுமென விதிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான ஒருவழிகாட்டியோ, விளக்கக்குறிப்புகளோ இல்லாத படியால் ஆசிரியர் பெருந்தின்டாட்டத்திற்குள்ளாகியுள்ளனர், ஆண்டின் இறுதியில் இவ் வகுப்புகளை ஆளைக்கிறதும் ஒரே விதமான வினாத்தாள்கள் தயாரிக்கப்படுவது சந்தேகமென அவர்கள் கருதுகின்றனர்.

## ஆசிரியமன்ற நிர்வாகிகள்

உடுவில், செவ்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆசிரிய மன்றம் வித்துவான் கி. ஆறுமுகம் தலைமையில் கூடி நடப்பு வருடத்திற்கான உத்தியோகஸ்தர்களைத் தெரிவு செய்தது.

தலைவர்: திரு. எஸ். துரைசிங்கம், உபதலைவர்: திரு. எஸ். பெரியதம்பி, செயலாளர்: திரு. கே. இராசநாயகம், உபசெயலாளர்: திரு. எம். கே. கந்தையா, பொருளாளர்: திரு. இ. சிவானந்தன், நூல்நிலைய பொறுப்பாளர்: திரு. எம். தார்சிசியஸ்.

நிர்வாக உறுப்பினர்களாக திருவாளர்கள் வி. கிருஷ்ணன், எஸ். ஆறுமுகம் திருமதி ஆர். தம்பாப்பிள்ளை திருமதி பி. சண்முகானந்தம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கையிருப்பில் போதியளவு நூல்

கோப்பாய், செவ்

நெசவாளர்க்குப் போதியளவு நூல் கையிருப்பில் இருக்கிறது என கைத்தொழில் விஞ்ஞானவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் நெசவாலைகளை, நூலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் நெசவுத் தொழிலும், நெசவாளர்களும் வெகுவும் பாதிக்கப்படுவார்கள் எனவும் புகார் செய்ததையடுத்தே அமைச்சு மேற்படி தகவலை வெளியிட்டுள்ளது.

நெசவாளர்களின் இந்தப் புகாருக்குக் காரணம் நூல் விநியோகிக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் தாமதமே காரணம் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## யாழ்-கச்சேரி பஸ்சேவை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கச்சேரி பஸ்சேவை நேர அட்டவணைப்படி நடைபெறுதால் பிரயாணிகள் பலவித சிரமங்களுக்காளாக வேண்டியுள்ளது. குறித்த சேவை பற்றிய நேர அட்டவணை பஸ் நிலையத்தில் பொறிக்கப்பட்டிருந்தபோதிலும், அட்டவணைப்படி பஸ்கள் சேவையாற்றவில்லை. இதனால் பிரயாணிகள் மிகுந்த அசௌகரியத்திற்குள்ளாகியிருக்கின்றனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

[illegible]-3-72 புதன்

செய்திகள், காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00

காலை 6-15 நாதஞ்சலி மங்கள வாத்தியம், 6-20 சைவநற்சிந்தனை பூ. ஆ. சிவசுப்பிரமணியக் குருக்கள், 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 மன் கச்செய்திகள், 7-05 துதிப்பாடல், 7 35 குரல் வளம், 8-00 இசை வேளை, 8-15 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி நடத்துபவர்: சகோ. பிரா. தியோபிலஸ் ராசன், 6-30 பாட்டு- கல்வின் தேவசகாயம், 7-00 கண்ணோட்டம் திரு. வசந்தவிநோ, இரவு 7-15 திருக்குறள் அமுதம், 7-30 வெளிநாட்டுச் செய்திகள் 7-35 மெல்லிசைப்பாடல்கள் பாடுபவர்கள்: செல்விகள் புனலேஸ்வரி, பசிலதி, 7-45 நாடகம் 'தேன் நிலவு' சின்னையா சிவனேசன் எழுதியது. 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி 9-10 செய்தியின் பின்னணியில், 9-15 புல்லாங்குழல் இசை, 9-30 இசைக்கச்சேரி [நாகசுரம்] பி. கந்தசாமி திருப்புகர்.

## ஆசைவிழா இன்றைய நிகழ்ச்சி

குருநகர், புதன்

யாழ். இளங்கலைஞர் மன்றத்தின் மூன்றும் நாள் இசைவிழா நிகழ்ச்சிகள் இன்றைய நிகழ்ச்சிகளுக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமை தாங்குகின்றார்.

மாலை 5-00 - செல்வி ஜெயதேவி நவரட்ணம் - பாட்டு செல்வன் க. சேய்நதன்-மிருதங்கம்.

5-30—6-15 செல்வி இராஜேஸ்வரி நடராசா- பாட்டு 6-15—7-00 செல்வன் கி. மாணிக்கராசா -பாட்டு 7-00—7-30 செல்வி சிவயோகி சவுந்திரம் -வயலின், 7-30—7-45 தலைமையுரை தவத்திருசுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள். 7-45—8-30 செல்வன் குணபூஷணம் நாகலிங்கம்-பாட்டு 8-30—10-00 சிறப்பு நிகழ்ச்சி பி. ஏ. எஸ். ராஜசேகரன் -பண்ணிசை.

### கலைஞர்களுக்கு தங்கப்பதக்கம்

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தினர் நடாத்தும் இசைவிழாவின் 6-ம் நாள் நிகழ்ச்சியன்று மேற்படி மன்றத்தினால் நடத்தப்பட்டுள்ள இசைப்போட்டியில் பரிசுபெற்ற 10 கலைஞர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட விருக்கின்றது. 18 கலைஞர்களுக்கு மற்றும் பரிசில் வழங்கப்படவிருக்கின்றன.

யாழ் திவ்விய ஜீவனமண்டபத்தில் 6-ம் நாள் நிகழ்ச்சி 25-ம் திகதி கழகக்குலைஞர் திரு. கே. வி எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

## ஆசிரியர் அலுவல்களுக்கு சனிக்கிழமை ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், புதன்

'ஆசிரியர்கள் தங்கள் வேலைத்தொடர்பான அலுவல்களை உடனடியாகவும் சிரமமின்றியும் கவனிப்பதற்கு சனிக்கிழமை ஒதுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் அதிகாரிகள் அனைவரும் அலுவலகத்தில் இருக்கவேண்டும் சுற்றுப்பயணங்களும் வெளியே உள்ள உத்தியோகக் கடமைகளும் அன்று தவிர்க்கப்படவேண்டும். அன்று எல்லாவிஷய எழுதுவினைஞரும் அலுவலகத்தில் இருக்கவேண்டும்.'

இவ்வித சுற்றுநிருபம் ஒன்றை வடபகுதிக் கல்வி பதிப்பதிகாரியாலயம் ஆசிரியருக்கு விடுத்துள்ளது.

பாடசாலை நேரத்தில் அலுவலகத்திற்கு வரும் ஆசிரியர் பாடசாலை வேலையைக் கடத்தியவர்களாகக் கருதப்பட்டு நடவடிக்கைக்கு இலக்காக நேரிடும்; சனி தவிர்ந்த நாட்களில் பாடசாலை நேரத்தில் அவசிய தவிர்க்க முடியாத காரணத்தால் வருவதாயின் அதிபரின் அனுமதிக் கடிதத்துடன் வரவேண்டும் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### "முத்திரையுடன் துணியும் வேண்டும்"

சுழிபுரம், செவ்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் மருந்து கட்டும் துணிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது: மருந்து கட்டச் செல்பவர்கள் முத்திரையுடன் துணிகளும் கொண்டுவரும்படி கேட்கப்படுகின்றனர்: கடந்த 10 தினங்களுக்கு மேலாக துணித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி மேலிடத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### கெனடி கழகம் வெற்றி

சுழிபுரம், செவ்

தொல்புரம் கெனடி கழக கிரிக்கட் கோஷ்டிக்கும், மூளாய் கிழக்கு வாலிபர் சங்க கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கெனடி கோஷ்டியினர் இன்னிங்சாலும் ஆறு விக்கட்டுகளாலும் 130 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றனர்.


# தமரோன் எல்.சி.60

ஒரு புதி அற்புதமான BAYER சர்வ பூச்சி நாசினி

குத்தும், உறிஞ்சும், கடிக்கும் அரிக்கும் எல்லாப் பூச்சிகளை அழிக்கும்.



## பயிரைப் பாதிக்கிறதா? வருவாயைக் குறைக்கிறதா?

பூச்சி, புழுக்கள் பயிரைப் பாதிக்காவண்ணம் பயிர்களைக் காத்து, அதிக பண லாபம் பெறும் வண்ணம் பல வருட நுட்ப ஆராய்ச்சியின் திறமையினால் மேற்கு ஜெர்மனியில் இருக்கும் பேயர் ஸ்தாபனம்- விவசாயிகளின் கவலையை புதிய தமரோன் எல், சி. 60 கிருமி நாசினியால் உடனே தீர்த்து விடும். தற்பொழுது இலங்கையில் தயாரித்து விநியோகிப்போர் ஹேமகம லிமிடெட்.

தமரோன் தெளித்தவுடன் தொடர்புக் கொல்லியாகவும், பயிர் சாற்றுடன் சேர்ந்து நீடியகாலம் தங்கும் சக்தி வாய்ந்த நாசினியாகவும் பயன்படுகிறது. குத்தும உறிஞ்சும், பூச்சி, களான வெண் ஈ, திரிபஸ், தத்துக்கிளி, அழுக்கணவன், மயிறஸ், வண்டு ஆகியவற்றையும் கடித்துண்ணும் மயிர்ப்புழு, அறக்காட்டியான், கபளப்புழு, இலை காட்டி ஆகிய பூச்சி புழுக்கள் எல்லாப் பயிர்களையும் பாதிக்காதுகட்டுப்படுத்தும், மிளகாய்-பொட்போரர் (உறைதுளை புழு) குருமண் நோய் ஆகியவற்றை அழிக்கும்;

மரக்கறிவகை- கொறவணன் புழு, அழுக்கணன்) இலையரிப் புழு ஆகிய எல்லாப் பூச்சி புழுக்களை அழிக்கும். நெல், சந்துகுத்தி, இலை சுருட்டி ஆகிய எல்லாப் பூச்சி புழுக்களை அழிக்கும். பருத்தி, சோளன், கரும்பு, வாழை, திராட்சை ஆகிய பயிர்களிலும் பாவிக்கலாம்.

வேறு விபரங்களுக்கு:

ஹேமகம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10.

தொலைபேசி: 9 563[illegible] 96[illegible]

# கள்ளுத்தவறணையிலிருந்து வரி அறவிடப்படும்

யாழ்ப்பாணம், புதன்
கள்ளுத்தவறணைகள் எப்ரலில் ஏலத்தில் விடப்படும் எனக் கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை. கள் உற்பத்தி விற்பனை சங்கங்களிடமே கள்ளுத்தவறணைகள் ஒப்படைக்கப்படும்.

யாழ். அரசாங்க செயலக உதவியாளர் திரு. கே. சண்முகலிங்கம் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சண்முகலிங்கம் மேலும் கூறியதாவது ஒவ்வொரு கள்ளுத்தவறணையிலிருந்தும், அங்கு விற்பனையாகும் கள்ளின் அளவைப் பொறுத்து வரி அறவிடப்படும்.

கள் கூட விற்பனையாகும் தவறணைகளில் அதிக வரியும் குறைய விற்பனையாகும் தவறணைகளில் குறைந்த வரியும் அறவிடப்படும். இந்த வரியை சங்கங்களே செலுத்த வேண்டும்.

## நகரமேயர் திடீர் சுகயீனம்

குருநகர். செவ்வாய்
யாழ். நகர முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா திடீர் சுகயீனமுற்றுள்ளார். வைத்தியர்களின் ஆலோசனையின் பேரில் இவர் ஒரு வார காலம் ஓய்வெடுத்துவருகின்றார். இந்தச் சுகயீனம் காரணமாகக் கடந்த 3 தினங்களாக மேயர் தமது முக்கிய அலுவல்கள் யாவற்றையும் காலவரையின்றி ஒத்திவைத்துள்ளதாக அறியப்படுகிறது.

## இன்று

வண்ணை சிவன்கோவில் 18ந் திருவிழாவான இன்று மாலை 6 முதல் 7-30 மணிவரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் கந்தரலங்காரத் தொடர் பிரசங்கமும் இரவு 8-30 முதல் 9-30 மணிவரை செல்வி மீனு ரங்கசாமிஐயரின் இன்னிசைக்கச்சேரியும், சுவாமி காளை வாகனத்தில் வீதிவலம் வருதலும் நிகழும்.

## இரு போட்டிகளிலும் முதலிடம்

சுழிபுரம், செவ்
வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்திய தமிழ் பேச்சுப் போட்டியில் கீழ்ப் பிரிவு பெண்கள் பிரிவிலும், கலைமகள் மன்றம் சாரணர் சங்கத்தினர் நடாத்திய பேச்சுப் போட்டியில் இடைநிலைப் பெண்கள் பிரிவிலும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவியான செல்வி நிரஞ்சினி பொன்னையா முதலாம் இடத்தைப் பெற்றார். இவர் இக்கல்லூரியின் தலைமை ஆசிரியர் திரு. அ. நா. பொன்னையா, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியை திருமதி இ. பொ. பொன்னையா ஆகியோரது கனிஷ்ட புதல்வியாவார்.

## சமயப் போட்டியில் இவர்களுக்கு பரிசு

யாழ்ப்பாணம், புதன்
சித்தன்கேணி சிவச்செல்வி இந்து சமய மன்றத்தினர் யாழ். மாவட்ட ரீதியில் கடந்த மாதம் நடாத்திய தேவார, திருக்குறள், திருவருட்பயன் மனன எழுத்துப் போட்டிகளில் யாழ் மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளிலிருந்தும் 905 மாணவர்கள் பங்குகொண்டனர். மேற்படி போட்டிகளிற் கலந்து பின்வருவோர் பரிசு பெறுகின்றனர்.

தேவாரம்: புனிதவதி யோகீஸ்வரன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி செல்வமணி சண்முகம் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இரஞ்சினி குமாரசாமி மகாஜனக் கல்லூரி. மற்றும் 7 பேர் ஆறுதற் பரிசுகள் பெறுகின்றனர்.

திருக்குறள்: ச. கருணாகரன் - மகாஜனா. பத்மாவதி முருகேசு - கலைவாணி ச. ச. நிலையம், அளவெட்டி. இந்திராணி மாணிக்கம் - மகாஜனா. மற்றும் 7 ஆறுதற் பரிசுகள்.

திருவருட்பயன்: இராணி அரியபுத்திரர் - சண்டிலிப்பாய் சைவப்பிரகாச மகாவித்தியாலயம். புவனேஸ்வரி அம்பலத்துரை - மகாஜனா கமலாம்பிகை செல்வத்துரை - மகாஜனா. கமலராணி செல்லையா - மகாஜனா. மற்றும் 7 ஆறுதற் பரிசுகள்

பரிசில் இம்மாதம் 25 ம் திகதி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறும் கலை விழாவில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் வழங்கப்படும்.

—

## உற்சவம்

சுழிபுரம் செவ்வாய்
கண்டவனைபுளியமரம் காசிணைநாதத்தம்பிரான் கோவில் உற்சவம் இம்மாதம் 29-ம் திகதி நடைபெறவுள்ளது.

0 0 0

"மண்ணும் சிவத்தலை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தேர்த் திருவிழாவின்போது பண்ணாகம் அண்ணாமலை சைமன் தம்பதிகள் தேர்த்திருவிழா மலர் வெளியிடவுள்ளனர்.

0 0 0

பருத்தித்துறை, செவ்.
வல்லவை வைத்தீஸ்வரன் ஆலய உற்சவம் ஆரம்பித்துவிட்டது. எதிர்வரும் பூரணையன்று முடிவடையும் இவ்வுற்சவத்தில் கதாகாலட்சேபங்கள், இசை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்றுவருகின்றன.

## மாணவர் திரட்சிக் குறிப்பு

யாழ்ப்பாணம், புதன்
'வடபகுதியில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஒவ்வொரு மாணவனுக்குமான திரட்சிக் குறிப்பு இவ்வாண்டு தினசரி வரவு இடாப்பு ஒழுங்கின்படியும் வகைப்படுத்தி வைக்கப்படுவதுடன் அதில் கேட்கப்பட்டுள்ள விபரங்களும், பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்".

இவ்விதச் சுற்றறிக்கை ஒன்றை வடமாநிலக் கல்விப்பதி திரு. விஜிதா அபயசேகரா சகல அதிபர்களுக்கும் அனுப்பியுள்ளார். மேலும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது!

"இவ் விடயத்தில் வகுப்பு ஆசிரியர்கள் உதவியையும், பாடசாலையிலுள்ள ஆசிரிய ஆலோசகரின் ஒத்துழைப்பையும் அதிபர்கள் பெற வேண்டும் ஒரு மாணவர் பாடசாலையை விட்டு வேறோர் பாடசாலைக்குச் செல்லும் அவருடைய திரட்சிக்குறிப்பு அப் புதிய பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கவேண்டும்"

(பரு.நி)

—

## இடமாற்றம்

பருத்தித்துறை, செவ்வாய்
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆங்கில விசேஷ ஆசிரியர் திரு ஜெராட் மஜிலாக் யாழ். செங்குந்த மகா வித்தியாலயத்திற்கும், நெடியகாடு மகா வித்தியாலய ஆசிரியை திருமதி எஸ். செல்வராசா ஹாட்லிக் கல்லூரிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## தன் எலும்பை தனயனுக்கு ஈந்த தாய்!

பெய்ரோ, மார்ச் 21
தனது தொண்டிப் பிள்ளையின் முடத்தன்மையை நீக்குவதற்கென தனது கால் எலும்புகளில் அரைவாசியை வழங்கினாள் ஓர் அன்னை.

இச் சம்பவம் சமீபத்தில் எகிப்தில் உள்ள நைல் ஆற்றுப்பகுதியில் நடைபெற்றது. 65 வயதான திருமதி அமினா எல் ஷரிகா விஹகாக் என்ற இம்மாது சிறு வயதிலேயே தொண்டியாகி தற்போது 20 வயது நிரம்பப் பெற்ற மன்சூரா பல்கலைக் கழகத்தில் வைத்தியப் பிரிவில் பட்டதாரி மாணவனாகப் பயின்றுகொண்டிருக்கும் தனது பிள்ளைக்கே தன் எலும்புகளை வழங்கினாள்.

எகிப்தின் இலட்சிய அன்னை என இவர் புகழ் பெற்றுள்ளார். சத்திர சிகிச்சைமூலம் இவ் எலும்புகள் பொருத்தப்பட்டு தற்போது நன்றாக உலாவிவரும் இந்த மருத்துவ மாணவன் எலும்பு சத்திர சிகிச்சை பற்றி விசேஷ பட்டப்படிப்பு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

# 'இந்துகலைக்களஞ்சியம் வெளியிட வேண்டும்'

கொழும்பு, செவ்.
'இந்து சமய முன்னேற்றத்திற்கும், பொதுவாக இந்து சமயம் சம்பந்தமாக உலக மக்கள் தெரிந்து கொள்வதற்கு வசதியாகவும் இந்து கலைக்களஞ்சியம் வெளியிடுவது அவசியம். இதை நிறைவேற்றுவதற்கு ஒரு வேலைத் திட்டத்தை வகுத்து அதை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என்று கூறும் தீர்மானம் இம்மாதம் 26 ம் திகதி காலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 17-வது ஆண்டு நிறைவு மாநாட்டில் எடுத்து கொள்ளப் படவிருக்கிறது.

இந்து சமயத்தை முன்னேற்றும் முகமாக ஒவ்வொரு இந்துக் குடும்பத்தவர்களும் தமது சமய அனுட்டானம் அதிக பலனை அளிப்பதற்கு வைத்திருக்க வேண்டிய சாமான்களின் பட்டியல் ஒன்று தயாரிக்க வேண்டுமென்றும் இந்து சமயத்தை முன்னேற்றும் முகமாக ஒவ்வொரு இந்துக் குடும்பத்தவர்களும் தமது சமய அனுட்டானம் அதிக பலனை அளிப்பதற்கு வைத்திருக்க வேண்டிய சமய நூல் பட்டியல் ஒன்று தயாரிக்க வேண்டுமென்றும் இதைத் தயாரிப்பதில் இந்து சமயப் பற்றுள்ள பிரமுகர்களையும் ஸ்தாபனங்களையும் கலந்து அவர்கள் கருத்துக்களையும் ஆராய வேண்டுமென்றும், இந்து சமய கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்ய கல்வி ஸ்தாபனங்களில் இந்து சமய கோட்பாடுகளை கற்கவும் அனுஷ்டானம் செய்யவும் ஏற்பாடு செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறும் தீர்மானங்களும் இக் கூட்டத்தில் எடுக்கப்படவிருக்கின்றன.

# ஏழாலை வயோதிபர் கொலை: சந்தேகநபர் சரண்

மாவிட்டபுரம், செவ்
ஏழாலைவயோதிபர் கொலை சம்பந்தமாக தேடப்பட்ட சந்தேக நபர் மல்லாகம் நீதிபதி முன் சரண்புகுந்தார்

ஏழாலையைச் சேர்ந்த 70 வயதுடைய ஒரு வயோதிபர் குத்தூசிக் காயத்தக்குள்ளாகி மரணமானது குறித்து சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் தேடப்பட்டு வந்தார். இவர் வழக்கறிஞர் மூலம் மல்லாகம் நீதிபதி முன் சரண்புகுந்தார்.

இவர் மீது விரைவில் வழக்கு தொடரப்படவிருக்கிறது.

# இலங்கை இந்திய பொலிஸ் உயர்தர மகாநாடு

யாழ்ப்பாணம். புதன்
கள்ளக் கடத்தலை முறியடிப்பதற்கும், சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்குமான இலங்கை, இந்திய பொலிஸாரின் உயர்தர மாநாடு இன்று கொழும்பில் நடைபெறவிருக்கிறது

இம்மாநாட்டில் தமிழ்நாடு உதவி பொலிஸ் அதிபர் திரு கிருஷ்ணராஜ், வட பிராந்திய உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு ஐவர் ஸண்ட் வெல்ட். வடபகுதிபொலிஸ் அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கம், சட்டவிரோத குடியேற்றத் தடுப்புப் பகுதி பொலிஸ் அதிபர் திரு சேசி இராமநாதன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்

இந்திய உயர்தர பொலிஸ் அதிகாரிகளும். சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு வேலைகளில் சம்பந்தப்பட்ட கடற்படை, விமானப் படை, இராணுவப் படை உயர்தர அதிகாரிகளும் இம்மாநாட்டில் பங்குபற்றுவார்கள்

கள்ளக்கடத்தலையும், சட்டவிரோத குடியேற்றத்தையும் தடுப்பதற்குரிய முக்கிய தீர்மானங்கள் இம்மாநாட்டில் எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது

## கோரிக்கைகளை நிறைவேற்ற சம்மதம்

எழுதுமட்டுவாள். செவ்
கட்டிடத் திணைக்களப் டிப்போக்களில் வேலைசெய்யும் படித்த ஊழியர்களுக்கு சந்தர்ப்பம் வரும்போது நிரந்தர்வேலை கொடுக்கப்பட்டு வேலை முதலிய மற்றும் வேலைகள் வழங்குவதற்கு கட்டிடத் திணைக்கள யாழ் மாவட்டப் பொறியியலாளர் திரு. கே. மகேஸ்வரன் இதுசம்பந்தமாகத் தம்மை நேரில் சந்தித்துப் பேசிய தூதுகோஷ்டிக்குச் சம்மதம் தெரிவித்தார்.

வடபகுதி கட்டிட நிர்ப்பாசன பெருந்தெருக்கள் அமைச்சுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. கே. முத்துலிங்கம், காரியதரிசி திரு. தா. கணபதிப்பிள்ளை. மற்றும் இரு உறுப்பினர் கள் கொண்ட குழு 12 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றைச் சமர்ப்பித்து மாவட்டப் பொறியியலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

இவர்களது 11 கோரிக்கைகளுக்குச் சம்மதம் தெரிவித்து விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாக திரு. மகேஸ்வரன் உறுதியளித்தார்.

## 175 ரூபா அபராதம்

மாவிட்டபுரம், செவ்
காஙழத் தோட்டத்தில் வைத்து சாராயம் விற்றதற்கு மல்லாகம் நீதிபதி 175 ரூபா அபராதம் விதித்தார்

குரும்பசிட்டியைச் சேர்ந்த இந்நபர் காங்கேசன்துறைத் தோட்டத்தில் வைத்துச் சாராயம் விற்கும் சமயம் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டார் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவருக்கு நீதிபதி 175 ரூபா அபராதம் விதித்தார்

## அதிர்ஷ்டலாபச்சீட்டு இழுக்கப்பட்டது

எழுதுமட்டுவாள் செவ்.
எழுதுமட்டுவாள் கிழக்கு மண்ணடி அம்மன் வசந்தமண்டப கட்டிட நிதிக்காக தர்மகர்த்தா சபையினர் நடத்திய அதிர்ஷ்ட லாபச்சீட்டை மிருசுவில் கிராமசபைத் தலைவர் திரு க. குலசேகரம்பிள்ளை இழுத்தார். இவ்விழாவில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கு எழுதுமட்டுவாள் தமிழ்மன்றத் தலைவர் திரு. சி. வீரகத்தி தலைமைவகித்தார்.


2 அவுன்ஸ் கோறு தேயிலை பக்கட் இப்பொழுது விலை

35 சதம்




இப்பொழுதே வாங்கி பணத்தை சேமியுங்கள்

புறூக் பொண்ட் இலங்கை லிமிட்

ZENITH

## மணிவாக்கு

பணம் என்பது லட்சுமி தேவியாகும். வேற்றுமை காட்டாது எல்லாருக்கும் பயன்பட பணத்தை ஈட்டுங்கள். தெய்வப்பணி என்பது மக்களின் பணி. உங்கள் ஆத்மீக முன்னேற்றத்துக்கு அது வழி செய்யும். பணம் இருக்கலாம். ஆனால் அதன்மீது பற்றுதல் வேண்டாம்.

...சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

விரோதிகிருது வருஷம் பங்குனி மாதம் 9-ந் திகதி (22-3-72)


## சேவைக்கும் நேர்மைக்கும் பரிசு

சரவணமுத்து செல்வநாயகம். இவர் தபால் இலாகாவின் இரண்டாம் 'கிரேட்' லிகிதர். ஆனால் இவரது நேர்மையும் திறமையும் சலியாத உழைப்பும் தமது நாட்டுக்கு சென்ற வருடத்தில் கிடைக்கவேண்டிய சுமார் எழுபத்தையாயிரம் ரூபாய் அந்நியச் செலாவணியைக் கிடைக்கச் செய்திருக்கிறது. இதனுள் இருபதினாயிரம் ரூபாய் சென்ற ஆண்டில் தமது நாட்டுக்குக் கிடைக்காமல் போயிருந்த வருமானத்தை திரு. செல்வநாயகம் தேடிக்கொடுத்திருக்கிறார். இவரது நேர்மையையும் சேவையையும் பாராட்டிக் கௌரவித்திருப்பதுடன் ஐநூறு ரூபாய் பரிசு பணமாகவும் இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இரத்தினக்கல் கடத்தலுக்கும் காசோலைகள், மணிஓடர்கள் தொலைவதற்கும் தபால் இலாகா பெரும்பாலும் காரணமாக இருக்கிறதென்று குற்றம் சாட்டப்படும் இக்காலத்தில் திரு. செல்வநாயகம் போன்ற லிகிதர்கள் அந்த இலாகாவின் பெருமையை நிலைநாட்டியிருப்பது இதர அரசாங்க இலாகாக்களிலுள்ள லிகிதர்களுக்கு மட்டுமல்ல உயர் அதிகாரிகளுக்கும் கூட சிறந்த வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

தபால்தந்தி இலாகாவில் மட்டும்தான் ஊழல்கள் நிறைந்திருக்கவில்லை. சகல இலாகாக்களிலும் ஊழல்கள் இருக்கத்தான் செய்கின்றன. இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் இது உண்மையென்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஒருசிலர் தவறாக நடந்துகொள்வதால் அந்த இலாகாக்களிலுள்ள அனைவருமே இழிச்சொல்லுக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாகநேரிடுகிறது. தபால் இலாகாவைச் சேர்ந்த திரு. செல்வநாயகம் போன்றோர் தமது நேர்மையையும் சேவையையும் வெளிக்காட்டும்போது தான் அவர்கள் பணியாற்றும் இலாகாவும் பெருமை பெறுகிறது! அவர்களது பெயரும் வெளிவருகிறது. இவரைப்போன்ற ஆற்றலும் நேர்மையும் சேவை மனப்பான்மையுமுடையவர்களைக் கௌரவிப்பதன் மூலம் அந்த இலாகாக்கள் மட்டுமல்ல நாடே பெருமையடையும். மற்றவர்களும் அவரைப் பின்பற்றுவர்!

## அமைதிப்பணி!

இந்துமகாசமுத்திரப் பகுதியிலுள்ள டீகோ-காசியா தீவில் அமெரிக்க - பிரிட்டிஷ் இராணுவக் கட்டுத்தளம் அமைப்பது குறித்து இந்தியாவைப் போலவே இலங்கையும் கவலை கொண்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்ச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்துமகாசமுத்திரப் பகுதியில் அமெரிக்காவும் பிரிட்டனும் மட்டுமல்ல வேறு எந்த வல்லரசும் தளம் அமைக்க முற்படுவது குறித்து இலங்கையும் இந்தியாவும் மட்டுமல்ல தென்கிழக்காசிய நாடுகள் அனைத்துமே நிச்சயம் கவலையடையவேண்டும். கவலைதெரிவித்தால் மட்டும் போதாது. இந்தியா இலங்கை மட்டுமல்லாது இப்பகுதிகளிலுள்ள நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இங்கு அந்நிய வல்லரசுகள் தளம் அமைப்பதற்கு எடுக்கும் முயற்சியை முறியடிக்க வேண்டும்.

இந்தியா, பாகிஸ்தான் பங்களாதேஷ் ஆகியமூன்று நாடுகளின் தலைவர்களும் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி அதிலும் பிரச்சினைகளைச் சந்தித்துப் பேசி ஒரு தீர்மானத்துக்கு வருவதன் மூலம் இந்திய உபகண்டத்தில் நிரந்தரமான அமைதியையும் இப்பகுதி மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கான வழிவகைகளையும் காணமுடியுமென்று பிரிட்டிஷ் வெளிவிவகாரமந்திரி விரும்புகிறாரே அதே போன்றுதான் தென்காசிய நாடுகள் தமக்குள் நேரடியாகப் பேச்சு நடத்தி தமது பாதுகாப்பையும் பொருளாதார முன்னேற்றத்துக்கான வழிகளையும் வகுத்துக் கொள்ளமுடியும்.

இந்நிலையில் இந்துமகா சமுத்திரப் பகுதியில் பிரிட்டிஷ் அமெரிக்க இராணுவக் கட்டுத்தளம் எதற்கு? இதுபற்றி இந்தியாவும் இலங்கையும் ஒன்று சேர்ந்து இதர நாடுகளின் ஆதரவையும் பெற்று இந்துமகாசமுத்திரப்பிரதேசத்தை அமைதிப் பிரதேசமாக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடவேண்டும்.

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 23-ம் திகதி மாலை வாண்டியன்தாழ்வு சனசமூக நிலையத்தில் யாழ். மாநகரசபை உறுப்பினரும் லங்கா சமசமாஜக் கட்சியின் வட பிராந்தியச் செயலாளருமாகிய திரு. அ. விசுவநாதன் 'ஐந்தாண்டுத் திட்டமும் பொதுமக்களும்' என்னும் பொருள் பற்றி விசேட சொற்பொழிவு ஒன்று நிகழ்த்துவார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பசுமைப்புரட்சிக்கு அடிகோலிய 'படிக்காத மேதை' டி. எஸ்.

சரியாக இருபது வருடங்களுக்கு முன், 1952-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி காலை ஆறு மணியளவில், சுதந்திரமடைந்த இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி அதிகௌரவ டொன் ஸ்டீபன் சேனநாயகா விழுந்த திடலில் வேறு நண்பர்களுடன் குதிரைச்சவாரி செய்துகொண்டிருந்தார். இது அவருடைய அன்றாட தேகாப்பியாசப் பொழுதுபோக்கு. திடீரென்று அவருடைய குதிரை எதையோ கண்டு மிரண்டு பிரதமரை தூக்கி எறிந்துவிட்டது. கீழே விழுந்தவர் எழும்பவில்லை. கொழும்பு சென்றல் ஆஸ்பத்திரிக்கு அவர் டாக்ஸியில் எடுத்துச் செல்லப்பட்டார். பிரபல டாக்டர்கள் அவரருகே விரைந்தனர். திரு. சேனநாயகாவுக்கு அறிவு வரவில்லை. லண்டனிலிருந்த இலங்கையின் ஸ்தானிகர் சேர் ஒலிவர் குணதிலகா இச்செய்தியை டெலிபோனில் கேள்விப்பட்டு பிரபல ஆங்கில வைத்திய நிபுணர் ஒருவரை விமானத்தில் கொழும்புக்கு அனுப்பிவைத்தார். ஒன்றும் பலனளிக்கவில்லை. திரு சேனநாயகா சுயநினைவு திரும்பப் பெறாமலேயே உயிர் நீத்தார்.

அவருடைய அகால மரணம் இலங்கை முழுவதையும் சோகத்தில் ஆழ்த்தியது. திரு. டி. எஸ். தமது எளிய இனிமையான சுபாவத்தாலும் கபடமற்ற நெஞ்சினாலும் இலங்கையில் வாழ்ந்த பல தரப்பட்ட மக்களையும் தம் வசப்படுத்திக் கொண்டனர். அவருக்கு இறுதி மரியாதை செய்யும் பொருட்டு இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து கொழும்புக்கு வந்து குவிந்த லட்சக்கணக்கான மக்களே இதற்கு போதிய அத்தாட்சி.

இந்த அசாதாரமான அணுகுண்டு யுகத்திலே ஒரு நாட்டின் தலைவரிடம் நாம் எதிர்பார்க்கும் உயர்ந்த கல்வியறிவோ, மக்களை மயக்க வைக்கும் பேச்சுவன்மையோ டி. எஸ். ஸிடம் இருக்கவில்லை. அவர் மிகவும் சாதாரணமான ஒரு மனிதர். சொத்தும் செல்வமும் படைத்த ஒரு குடும்பத்தில் பிறந்தவராயினும் பட்டப் படிப்புகளில் அவர் அக்கறை காட்டவில்லை. படிக்காமலே மேதையானவர். கல்கிசை சென். தோமஸ் கல்லூரியில் அவர் சில காலம் படித்த போது கிரிக்கட் விளையாடுவதில் தான் கூடிய அக்கறை காட்டினார். ஓய்வு கிடைத்த நேரங்களில் எல்லாம் அவர் தமது வயல்களிலும் காரியக்கரங்களிலுமே பொழுதைக் கழித்தார்.

இலங்கையின் 'பச்சைப் புரட்சி'க்கு அடிகோலியவர் டி. எஸ். இலங்கையின் முற்காலத்து மன்னர்கள் கட்டி வைத்த ஆயிரமாயிரம் குளங்கள் ஐரோப்பியர் ஆட்சியில் கவனிப்பாரில்லாமல் தூர்ந்து கிலமடைந்து போய்விட்டன. இவற்றை மீண்டும் பழுது பார்த்து திருத்தி நீர்ப்பாசன வசதிகளை உண்டுபண்ணி, விவசாயத்தை வளர்ப்பதால் தான் இலங்கைக்கு விமோசனம் கிடைக்கும் என்று பூரணமாக நம்பியவர் அவர். இந்த லட்சியத்தை அடைவதற்கு அரசியலில் பிரவேசித்தநாள் முதல் அவர் அயராது முயன்று வந்தார். நாமே பயிர் செய்வதன்மூலம் நாட்டின் தன்னிறைவு காணலாம் என்று முதல் முதல் திட்டமிட்டவர் டி. எஸ். உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம் முதலிய உப உணவுப் பொருட்களில் இன்று நாம் ஓரளவாயினும் தன்னிறைவு கண்டிருப்பது அவருடைய முயற்சியால்தான் என்று கூறுவது மிகையாகாது.

பழைய அரசாங்க சபையில் விவசாய மந்திரியாயிருந்த திரு. டி. எஸ். சுதந்திரத்துக்குப்பின் நாட்டின் பிரதம மந்திரியாக வந்தபோது, தாம் பார்த்துவந்த வேலைகளைக் கவனிப்பதற்கு நம்பிக்கையான ஒருவரை வைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தமது புதல்வர் டட்லியையே விவசாய மந்திரியாக்கினார்.

கல்லோயா அபிவிருத்தித் திட்டமும் அவர் பெயரிலுள்ள சேனநாயகா சமுத்திரமும், கந்தளாய், பொலன்னறுவை திட்டங்களும், வடக்கு, வடமத்திய மாகாணங்களிலுள்ள குடியேற்ற திட்டங்களும் திரு. சேனநாயகாவின் மூளையில் உதயமானவை. 'விவசாயமும் தேசப்பற்றும்' என்ற பெயரில் அவர் ஒரு நூலும் எழுதியுள்ளார்.

அவருக்கு முன்பும் அவருடைய காலத்திலும் வாழ்ந்த பிரபல தேசத்தொண்டர்களாகிய சேர். பொன். அருணாசலம், சேர். பொன். இராமநாதன், சேர் பேரன் பீரிஸ், சேர் ஜேம்ஸ் பீரிஸ், சேர் மார்க்கஸ் பெர்னாண்டோ முதலியவர்கள் தேச விடுதலைக்காக வகுத்த பல திட்டங்களை நுண்ணறிவோடும் சாமர்த்தியத்தோடும் தொடர்ந்து செயல்படுத்தி வந்தார் திரு. டி. எஸ். சேனநாயகா. குடியேற்ற நாட்டு ஆட்சி முறையிலிருந்து சுயாட்சி முறைக்கு இலங்கை மாறியபோது அந்த இடைக்காலத்தைப் பொறுமையோடும் புத்தியோடும் கையாண்டு 'நாட்டின் பிதா' என்ற பெயரையும் பெற்றார்.

திரு. சேனநாயகாவை ஓர் அரசியல் மிதவாதி என்று கூறலாம். நீண்டகாலத் திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதாலும், தேசிய ஒற்றுமையினாலும், கடினமான உழைப்பு, ஒழுக்கம் முதலியவற்றாலும் சுதந்திரக் குழந்தையை வளர்த்து பெரியவனாக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கம். பலாத்காரமான புரட்சிகளில் அவர் நம்பிக்கை வைக்கவில்லை.

தமிழரைப் பொறுத்தவரையில் அவர் நிதானமான முறையில் நடந்துகொண்டார். நாட்டின் தலைமைப்பீடத்துக்கு வந்த பின்பு தமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, திறமையான ஆட்கள் தேவை என்பதை உணர்ந்து சேர் கந்தையா வைத்தியநாதன், திரு சி. சுந்தரலிங்கம் முதலியவர்களின் ஆலோசனைகளையும் உதவியையும் தாராளமாகப் பெற்றுக்கொண்டார்.

அவர் இன்று உயிரோடு இருந்தால் தமிழர்-சிங்களவர் உறவுகள் வேறுவிதமாகப் போயிருக்கலாம்.

—'வழிப்போக்கன்'

### இன்று நினைவுதினம்

# அடையாளம் காணப்படாத சடலத்தின் வயிற்றில் நஞ்சு!

மாவிட்டபுரம் செவ், கீரிமலை கடற்கரையில் காணப்பட்ட சுமார் 60 வயது வயோதிபரின் சடலம் யாராலும் அடையாளம் காணப்படாததால் இதுபற்றி சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பொலிஸ் பகுதியை சேர்ந்த எஸ் சமன் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினார். சடலத்தை பலர் பார்வையிட்டுச் சென்றனர். எவரும் அடையாளம் காணவில்லை.

தெல்லிப்பழை மரணவிசாரணை அதிகாரி திரு என். சுந்தரமூர்த்தி மரண விசாரணை நடத்தினார். தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. ஜே. பேரின்பநாயகம் பிரேத பரிசோதனை நடத்தி இறந்தவரின் வயிற்றில் நஞ்சு காணப்பட்டதாக தெரிவித்தார். மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். சடலத்தை எவரும் ஏற்காததால் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

## 82 வயதான பாட்டி கடலில் மூழ்கி மரணம்!

வல்வெட்டித்துறை, செவ்.

பருத்தித்துறை கடலில் 82 வயதான ஒரு வயோதிப மாது நீரில் மூழ்கி மரணமானார். இப்பெண்ணின் சடலம் பழைய தபால் கந்தோருக்கருகிலுள்ள கடற்கரையில் காணப்பட்டது.

பருத்தித்துறையை சேர்ந்த பொன்னம்மாவின் மரண விசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் மரண விசாரணை நடத்தினார். பிரேத பரிசோதனை நடாத்திய பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் எஸ் சிவலோகநாதன் தண்ணீரில் மூழ்கியதால் மூச்சுத்திணறி இறக்க நேர்ந்தது என சாட்சியமளித்தார்.

கடற்கரையில் சடலத்தை கண்ட இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. செல்லத்துரை, பொலிஸாருக்கு அது பற்றிய தகவலைக் கொடுத்தார். இதைத் தொடர்ந்து பொலிஸார் மரண விசாரணைக்கு ஏற்பாடு செய்தனர். விசாரணை முடிவில் தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.